**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**எஸ்.டி.சி.எண்.2527/22**
**வழக்கு சாட்சி –1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மகாதேவன் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.03.23

**(1 முதர் 3 எதிரிகள் ஆஜர். )**

**<u>அரசு தரப்பில் முதல்விசாரணை</u>**

நான் தற்போது பிசிபட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.6.20ம் தேதி 21.30 மணிக்கு பிசிபட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது சார்பு ஆய்வாளர் உத்தரவுப்படி சார்பு ஆய்வாளருடன் சி.சா.ஆய்வாளர் சந்திரன் மற்றும் தலைமை காவலர்கள் 1510, 1974 ஆகியோருடன் மது சூது குற்றதடுப்பு சம்மந்தமாக பூதிப்புரம் ஏரியாவில் ரோந்து செய்து வந்த போது பூதிப்புரம் டாஸ்மார்க் கடை 8612 பின்புறம், சந்தேகப்படும்படியாக நின்றிருந்த பூதிப்புரத்தை சேர்ந்த பொன்னாங்கன் மற்றும் அவரது மகன் தங்கபாண்டி மற்றும் 8612 டாஸ்மார்க் கடையின் சூப்பர்வைஸ்யர் கணேசன் ஆகியோர் நின்றிருந்தார்கள். அவர்கள் அருகில் 3 அட்டைப்பெட்டிகளும், ஒரு வெள்ளைசாக்கில் மதுபாட்டில்கள் இருந்தன. அவர்களை விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக கூறியவர்கள் பின்பு சார்பு ஆய்வாளர் விசாரிக்க சட்டவிரோதமாக மதுபாட்டில்களை அதிகவிலைக்கு விற்பதற்காக இரண்டு அக்கார்டு பிராந்தி அட்டைபெட்டிகளில் 180 எம்எல் கொண்ட 96 பாட்டில்கள் மற்றும் ஹனிடே பிராந்தி 48 பாட்டில்கள் ஒரு வெள்ளைநிற உரச்சாக்கு பையில், எம்ஜிஎம் பிராந்தி 56 பாட்டில்களும், அக்கார்டு பிராந்தி 4 பாட்டில்களும், ஹனிடே பிராந்தி 42 பாட்டில்களும், மெட்டோ பிராந்தி 1 பாட்டில்கள் மொத்தம் 247 பாட்டில்களும் இருந்தது. அதை சட்டவிரோதமாக ரூபாய் 10 அதிகமாக கொடுத்து சூப்பர்வைஸ்யரிடமிருந்து வாங்கி விற்பனைக்காக வைத்திருந்ததால் 22மணிக்கு சார்பு ஆய்வாளர் அவரை கைது செய்து அந்த இடத்தில் தனி நபர் சாட்சிகள் யாரும் முன் வராததால் மேற்படி தலைமைகாவலளர்கள் 1510, 1974 ஆகியோர் முன்னிலையில் மேற்படி பொன்னாங்கனிடம் எவ்வித துன்புறுத்தலுமின்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் 22மணிமுதல் 22.45 மணிவரை ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தும், அதன் அடிப்படையில் தலைமைகாவலர் மற்றும் எதிரி பொன்னாங்கனிடம் கையெழுத்து பெற்றும், பின்பு ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் அருகில் வைத்திருந்த பாட்டில்களை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் 22.45மணி முதல் 23.15 மணி வரை அத்தாட்சியில் கைப்பற்றியும், பின்பு 23.45மணிக்கு எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துகளுடன் நிலையம் ஆஜராகி எதிரியின் மீது குற்ற எண். 1391/20 பிரிவு 4(1)(a) and 24 TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு

ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள்  தரப்பில் சாட்சியை  குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.**